C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்



# மன்னா..

பொழிவு : 16 JANUARY 2024 ஆகாரம் : 01

## என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை

யோவேல் 2:27

## Never again will my people be *Shamed*

JOEL 2:27

# CHURCH MONTHLY PROGRAM SCHEDULES

| | |
|---|---|
| 05-SAT<br>10.30 AM<br>1.00 PM | MONTHLY FASTING PRAYER<br>1 ST SATURDAY OF EVERY MONTH<br>CONTACT: THE PRESBYTER |
| 05-SAT<br>7.30 PM<br>9.00 PM | 1st & 3rd WEEK - COMMUNION SERVICE<br>OTHER WEEKS - EVENING SERVICE<br>LAST WEEK - PRAISE & WORSHIP SERVICE |
| WED<br>7.30 PM | BIBLE STUDY & PRAYER<br>PARSONAGE<br>CONTACT: THE PRESBYTER |
| FRI<br>7.30 PM<br>9.00 PM | 2 ND FRIDAY OF EVERY MONTH<br>MEN'S FELLOWSHIP PRAYER MEETING<br>MR. ASHOK KUMAR @ 050 842 9659 |
| FRI<br>7.30 PM<br>9.00 PM | 3 RD FRIDAY OF EVERY MONTH<br>WOMEN'S FELLOWSHIP PRAYER MEETING<br>MRS. SHALY MELBIN @ 056 394 1817 |
| THU<br>7.30 PM<br>8.30 PM | 4 TH THURSDAY OF EVERY MONTH<br>YOUTH FELLOWSHIP PRAYER MEETING<br>MR. SANTHOSH JOEL KUMAR @ 056 875 2723 |

# FROM THE PASTOR'S DESK

**அன்பிற்கினியவர்களே,**

**ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் புத்தாண்டு 2024—ன் வாழ்த்துக்கள்.**

கடந்த 2023 ஆம் ஆண்டை முடிக்கவும், புதிய ஆண்டு 2024—ஐ கண்டு வாழவும் செய்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்கே உள்ளார்ந்த மனதுடன் துதி, ஸ்தோத்திரங்களை செலுத்துவோம்.

எழுப்புதல் வீரர் எனப்பட்ட **DR.J.** எட்வின் ஓர் **(EDWIN ORR ,1912-1987)** அவர்கள் வடக்கு அயர்லாந்தில் பிறந்து, ஆண்டவர் இயேசுவுக்கு தம்மை ஒப்புக்கொடுத்து, ஆண்டவரின் திருப்பணிகளை தமது 19 வயதில் தொடங்கி உலகின் 100 நாடுகளுக்கும் மேலாக சென்று ஊழியம் செய்தவர். மறுமலர்ச்சிக் கூட்டங்களை நடத்தினவர், இந்தியாவுக்கும் வந்துள்ளார். இவர் பேப்டிஸ்ட் மிஷினரி, வரலாற்று ஆசிரியர், விரிவுரையாளர், மறுமலர்ச்சியாளர் ஆவார்

.

1936 ஆம் ஆண்டு நியூசிலாந்தில் நடைபெற்ற மறுமலர்ச்சிக் கூட்டத்தின் போது நள்ளிரவில் 4 மாவோரி பெண்கள் பிரியா விடை பாடலாக, **"THE SONG OF FAREWELL"** பாடினர். அதனைத் தொடர்ந்து DR.J அவர்கள் **"SEARCH ME, O GOD AND KNOW MY HEART TODAY"** "கடவுளே என்னை தேடும் ஆராய்ந்து பாரும்" என்ற பாடலை சங்கீதம் 139ஐ அடிப்படையாகக் கொண்டு எழுதி முடித்தார். குறிப்பாக சங்கீதம்:139:23,24 ஆகிய வசனங்களில் கடவுளே என்னை ஆராய்ந்து, என்னிலே வேதனை உண்டாக்கும் வழிகளை அகற்றவும், நித்திய வாழ்விலே நடக்கவும் அருள் தாரும் என்று வேண்டுவோமா?

பிரியமானவர்களே, லூக்கா:13:6—9 வரையில் ஒரு உவமையை ஆண்டவர் இயேசு கூறுகிறார். திராட்சத் தோட்ட உடமையாளர் ஒருவர் தோட்டத்தில் ஒரு அத்தி மரத்தை நட்டிருந்தார். அவர் வந்து அந்த அத்தி மரத்தில் கனியை தேடி ஒன்றும் காணாதபடியினால், பணி செய்கின்றவரை அழைத்து, மூன்று ஆண்டுகளாக இந்த மரத்திலே கனியை தேடி

வருகிறேன் ஒன்றையும் காணவில்லையே. எனவே இதை வெட்டி போடு இது நிலத்தையும் ஏன் கெடுக்கிறது? என்றார். (லூக்கா 13:7)

ஆண்டவர் இயேசுவின் தேடலும் கேள்வியும் இதுதான். அவரவர் தம் வயதை எண்ணிப் பார்த்து, ஆண்டவரின் அங்கலாய்ப்பான இத்தேடலுக்கு உள்ளார்ந்த மனதுடன் விடையைக் கண்டுபிடிப்போம். நம் வாழ்வில் கனிகள் காணப்படுகிறதா? (கலாத்தியர் 5:22,23)

உலகத்தின் முடிவுப் பரியந்தம் நம்மோடு இருக்கிற தூய ஆவியானவர் நமக்காக தந்தையாம் கடவுளிடம் பரிந்து பேசுகிறார். (லூக்கா 13:8,9) இந்த வருஷமும் (2024) இருக்கட்டும் என்று அங்கலாய்க்கிறார்.

புதிய ஆண்டாம் 2024—ல் நன்றி அறிதலோடு ஆண்டவரின் பாதச்சுவடுகளை பின்பற்றி நடப்போம், கனிகளைக் கொடுப்போம்.

"நான் இஸ்ரவேலின் நடுவில் இருக்கிறவரென்றும், நானே உங்கள் தேவனாகிய கர்த்தர் வேறொருவர் இல்லை என்றும் அறிந்து கொள்வீர்கள், என் ஜனங்கள் வெட்கப்பட்டு போவதில்லை" (யோவேல் 2: 27) என்ற திரு வார்த்தையை பற்றி கொண்டு புதிய ஆண்டிலே பயணிப்போம். ஆண்டவர் தாமே ஆசீர்வதிப்பாராக, ஆமென். அனைவருக்கும் புத்தாண்டு(2024) வாழ்த்துக்கள்.

இறைப்பணியில்,ஆயர்.

*Rev. S.Baktha Thiyagarajan*





# பாராட்டப்பட தக்கவர்கள்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

தூய பவுலினால் பாராட்டப்பட்ட பெண்களில் இருவர் ரோமர்:16ஆம் அதிகாரம் 12 ஆம் வசனத்தில் இவர்களின் பெயர்கள் திரிபேனாள், திரிபோசாள் என்று சேர்த்தே சொல்லப்பட்டு இருப்பதால் இவர்கள் இரட்டையர்களாகவோ அல்லது நெருங்கிய உறவினர்களாகவோ இருந்து இருப்பார்கள் எனக் கருதப்படுகிறது.

இருவருக்கும் இடையே அநேக ஒற்றுமைகள் காணப்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக இருவரும் கிறிஸ்துவுக்குள் வாழ்ந்தார்கள் என்பதுதான் மிக முக்கியம்.

## சிறப்புகள்:

- இருவரும் ஆத்ம பாரம் கொண்டவர்கள்.
- இருவரும் ரோமாபுரி திருச்சபையின் ஊழியர்களாக பணியாற்றியவர்கள்.
- ஆண்டவருக்காக நற்பணி செய்து பிரசித்தி பெற்றவர்களாகவும் இருந்தார்கள்.
- உயர்ந்து ரோம குடும்பத்தில் வசதியாக பிறந்த இருவரிடமும் நேர்த்தியான வாழ்க்கையும் உயர்ந்த பண்பாடும் காணப்பட்டது.
- ஆண்டவருக்கு முதலிடம் கொடுத்த இவர்களுக்கு சுகபோக வாழ்வு தூரமாய் இருந்தது.
- ஆண்டவரின் நற்செய்தி பணியில் தங்களை தீவிரமாய் ஈடுபடுத்தி ஆதி திருச்சபைகளின் துரிதமான வளர்ச்சிக்கும் அதன் வளத்திற்கும் காரணமாய் இருந்தார்கள்.
- பவுலின் வாழ்க்கையில் காணப்பட்ட நற்குணங்களை தங்களுக்குள் உருவாக்கி சிறந்து விளங்கினவர்கள்.

- ரோமப்பேரரசின் அரண்மனையில் இவர்கள் மூலம் இயேசுவை ஏற்றுக் கொண்டவர்கள் அநேகர் இருந்தார்கள்.

- ஊழியத்தின் பாதையில் இருவரும் இணைந்து ஆவியானவர் ஒத்தாசையோடு தேவனுடைய ராஜ்ஜியத்தை கட்டியிருக்கிறார்கள்.

- இவர்களுடைய கல்லறையில் "கர்த்தரை பின்பற்றியவர்கள், நேர்மையாய் நடந்தவர்கள்" என எழுதி இருப்பது குறிப்பிடத்தக்கது.

- ஒண்டியாயி ருப்பதிலும் இருவர் கூடி இருப்பது நலம். முப்புரி நூல் சீக்கிரமாய் அறாது என்று பிரசங்கி 4:12ல் கூறுவது போல் இருவரும் இணைந்து ஆண்டவரின் பணியை கடைசி மட்டும் செய்து இருக்கிறார்கள்.

- நம்முடைய வாழ்க்கையில் ஆண்டவர் இயேசுவின் ஊழியத்திற்காக எம் மட்டும் இணைகிறோம், அர்ப்பணிப்புடன் செய்கிறோம்? சண்டைகள், பிரிவினைகள் நிறைந்த இவ்வுலக வாழ்க்கையில் இணைந்து ஐக்கியமாய் கர்த்தருக்காக எடுக்கின்ற பிரயாசங்கள் ஒருபோதும் வீணாகாது. அதற்கான ஆசிகளை ஆண்டவர் அருள்வார்.

இந்தப் புதிய ஆண்டிலேயே கர்த்தருக்காக எதையாவது செய்வேன் என்று அறைகூவல் எடுப்போம். ஆண்டவர் நம்மை ஆசீர்வதிப்பார், ஆமென்.

இறைப்பணியில்,

ஆயரம்மா

*Mrs . P . Velanganni*





# செயலர் மடல்

கர்த்தருடைய பரிசுத்த நாமத்தினால் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து கடந்த 2023 வது வருடம் முழுவதையும் வாழச் செய்து, நம் அனைவரையும் இந்த 2024 புதிய வருடத்தில் நுழையச் செய்த தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரம். இந்த புதிய வருடம் நம் அனைவருக்கும் கீர்த்தியும் புகழ்ச்சியுமாக இருக்க கர்த்தர் தாமே அருள் செய்வாராக.

கடந்த மாதத்தில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் பாடல் பவனியில் கலந்து கொண்ட திருச்சபை மக்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து நமது ஆலயத்தில் நடைபெற்ற அனைத்து கிறிஸ்துமஸ் நிகழ்வுகளில் பங்கேற்ற அனைவருக்கும் நன்றி.

இந்த ஜனவரி மாதம் 14–ஆம் தேதியில் நடைபெறவிருக்கும் SPORTS MEET–ல் நம் திருச்சபை மக்கள் அனைவரும் உற்சாகமாக பங்கேற்க அன்புடன் அழைக்கின்றோம்.

## புதிய வருட சிந்தனை.

புத்தாண்டை மகிழ்ச்சியோடும், பொலிவோடும் தொடங்கி இருக்கிறோம். நேற்று நடந்தது நன்றாகவே நடந்தது என்று திருப்தியுடனும், இன்று நடப்பது நன்றாகவே நடக்கிறது என்று இறை நம்பிக்கையுடனும், நாளை நடக்கப் போவது நன்றாகவே நடக்கும் என்று எதிர்நோக்கு உடனும் நடை போடுவோம்.

மலர்ந்தது புத்தாண்டு,

மனங்களில் நிறையட்டும் மகிழ்ச்சியின் தாண்டவம்.

புலர்ந்தது புத்தாண்டு,

புவி தன்னில் புலரட்டும் புதிய விடியல்களின் கொண்டாட்டம்.

கடந்த ஆண்டுகளில் தோல்விகள் அடைந்திருந்தாலும், தலை நிமிர்ந்து நிற்போம்.மலைச் சரிவுகளில் நிமிர்ந்து வளரும் மரங்களைப் போன்று, இந்நிலையும் மாறும். இப்புத்தாண்டை இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் தொடங்குவோம்.

Wishing Everyone a Happy and a Prosperous New year-2024

இறைப் பணியில்

Mr. C . Havin Heba

திருச்சபைச் செயலர்





# தேவவசனமும் ஜெபமும்

இவ்வுலகில் ஒரு குழந்தை பிறந்தவுடன் குழந்தைக்கு உணவும், காற்றும் ஆகிய இவ்விரண்டும் மிகவும் தேவையாக இருக்கிறது. அதுபோலவே ஒரு ஆவிக்குரிய பிறப்பின் அனுபவம் இருக்கிறது. ஒரு புதிதாய் பிறந்த தேவனுடைய குழந்தை. புசிக்கவும், சுவாசிக்கவும் வேண்டும். அக்குழந்தைக்கு தேவனுடைய வசனமே உணவாகும். ஜெபமே ஜீவசுவாசம் ஆகும் மாறுகிறது. தேவனுடைய வசனம் நம்முடைய ஆரோக்கிய உணவாகும். ஒரு குழந்தை வளர்வதற்கு ஆரம்பத்தில் தான் பால் உணவு தேவைப்படுகின்றது. அக்குழந்தையை வளர்ச்சியடைய வளர்ச்சி அடையும் போது பலமான ஆகாரம் தேவையாய் இருக்கின்றது. கிறிஸ்துவை பற்றி சொல்லிய மூலப் பிரதேசங்களே பால் உணவாகும். (எபிரேயர் 6:1).

நீதியின் வசனமோ (எபிரேயர் 5:13) பலமான ஆகாரமாக இருக்கிறது. தேவன் நமக்கு தரும் வெளிச்சத்திற்கு. எவ்வளவு துரிதமாய் நாம் கிழ்படிக்கிறமோ அதைப் பொறுத்து தான் நாம் எவ்வளவு சீக்கிரமாய் பலமான ஆகாரத்தை புசிக்க ஆரம்பிப்போம். எந்த கால அளவு நிர்ணயிக்கப்படுகிறது? நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சி விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் சார்ந்திருக்கிறது. நாம் தேவனை விசுவாசித்து சார்ந்திருந்து கொள்ளும்படி தேவன் தன்னுடைய வார்த்தையால் வார்த்தையில் நமக்கு வாக்குத்தத்தங்களை தந்திருக்கிறார். அதேபோல் நம் கீழ்ப்படி கீழ்படிவதற்காகவே தெய்வம் நமக்கு அவருடைய வார்த்தை கட்டளைகளை தந்திருக்கின்றார். நாம் ஒழுங்காக தேவனுடைய வார்த்தையை தியானித்து. அவரை விசுவாசித்து சார்ந்து கொண்டு தேவனுக்கு கீழ்ப்படிவோம் என்றால் நாம் தேவனுக்குள் ஆழமாய் வேர்விட்டு. இலை உதிராதிருக்குற கனிதரும் மரம் போல் செழித்தோங்கி இருப்பதை நாம் கண்டுகொள்ள முடியும். மேலும் நாம் செய்வதெல்லாம் வாய்க்கும் இந்த நல்ல ஆண்டவர் ஆசீர்வதிப்பார் (சங்கீதம் 1:2,3)

## தேவனுடைய வார்த்தை ஆவியின் பட்டையம்

சாத்தானுக்கு எதிராக நாம் புரியும் விதத்தில் தேவனுடைய வார்த்தை ஒரு ஆயுதமாகவும் நமக்கு பயன்படுகிறது. இந்த ஆயுதம் ஆவியின் பட்டையும் என (எபேசியர் 6:17) ல் அழைக்கப்படுகிறது. வனாந்திரத்தில் இயேசுவுக்கு நிகழ்ந்த கடைசி மூன்று சோதனைகளில். இப்பட்டையும் மிகப்வலிமையாக உபயோகித்தார். சாத்தானின் சோதனையை எதிர்த்து தோற்கடிக்கும் ஒவ்வொரு சமயத்திலும் இப்படி எழுதியிருக்கிறதும்த்தையும் என தேவ வார்த்தையாகிய பட்டத்தை உபயோகித்தார் அவர் அப்படித்தான் ஜெயித்தார். அவ்விதமாகவே நாம் ஜெயிக்க முடியும். சாத்தான் எப்பொழுதும். நம்ம குற்றம் சாட்டுகிறவன் இப்படிகுற்றம் சாட்டுகிற சாத்தனை நாம் ஆட்டுக்குட்டி ரத்தத்தினாலே நாம் சாட்சியம் வசத்தினால் மாத்திரமே ஜெயித்திட முடியும். வெளிப்படுத்தினால் (12:11) ஆகவே ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி தேவனோடு பேசும் என அவரிடம் தெரிவித்து தேவ வார்த்தையை தியானிப்பது மிகவும் நல்லதாகும். இவ்வித முறை நாம் திருடனை வாழ்த்தி நம்முடைய இருதயத்தில் வைத்து வைத்தால் வசனங்களால் நாம் தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்யாதபடிக்கு நம்மை காத்துக்கொள்ளும் சங்கீதம்.19:11.

## ஜெபம் தேவனுடைய பேசும் இனிய நேரம் ஆகும்

தேவரோடு கொள்ளும் உறவு இருவழி சந்திப்பை உடையதாகும். முதலாவது தேவம் நம்மோடு அவருடைய வார்த்தையின் மூலமாய் பேசுவதைக் கேட்கிறோம். பின்பு நாம் அவரோடு பேசுகிறோம். வெறும் விண்ணப்பங்களை தேவர் இடத்தில் ஏற்பது மாத்திரம் ஜெபம் ஆகாது. நாம் ஜெபத்தில் முக்கிய பங்கு யாதெனில் நாம் தேவரோடு கொள்ளும் அன்னியோன்னியத்தில் ஒரு மணவாட்டி அவளின் மணவாளரோடு உறவாடும் நெருங்கிய ஐக்கியத்திற்குசமமாகும். எப்பொழுதும் ஜெபம்பன்ன வேண்டும் வேண்டும். (லூக்கா 18:1) என்று ஏசு நமக்கு சொல்லி இருக்கிறார். நாம் அன்றாட ஜீவியத்தில் ஒவ்வொரு சிறிய விஷயங்களையும் அவருக்கு தெரியப்படுத்தி அவரோடு உறவாடி சம்பாதிக்க நாம் கற்றுக் கொள்வது மிக மிக நல்ல பழக்கமாகும். இந்த அனுபவம் நம்முடைய தினசரி பழக்கத்துக்கு வந்துவிட்டால், நாம் நாள் முழுவதும் ஒரு சவால் நிறைந்தவர்களாய் இருப்போம். இவ்விதமாய் நாம் தேவனோட பேசி உறவாடும் நேரம் ஒரு மகிழ்ச்சி நேரமாக நமக்கு மாறிவிடும். பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும்

ஜெபித்துஇருக்கிறார் எபிரேயர் 5:7 வியாகுளத்தில் தவித்த பொழுது அவருடைய வியர்வை ரத்தத்தின் பெருந்தூலிகாலாய் பவிழுந்தது. லூக்கா 22:40 இராமுழுவதும். ஜெபத்தில் தரித்து இருந்தர். லூக்கா 6:12. மேலும். அவர் அடிக்கடி தனித்து வானத்திரத்துக்கு சென்று ஜெபிக்கும் பழக்கத்தை உடையவராயும் இருந்தார். லூக்கா 5:16 ஜெபம் எவ்வளவு முக்கியமானது என்பதை இயேசுவின் முன்மாதிரி நமக்கு தெளிவாக காண்பிக்கிறது. அவரே இவ்வளவு அதிகம் ஜெபிக்க வேண்டிய இருந்தால் நாம் எவ்வளவு அதிகம் ஜெபிக்க வேண்டும்? ஆகவே சோம்பலுக்கு எதிராக கடும் யுத்தம் செய்து. என்ன விலைக்குகிரயம் ஆனாலும் நாம் ஒரு ஜெபிக்கும் அதிகமாக மனுஷனாக அல்லது மனுஷியாக மாறிவிடுவதற்கு தீர்மானமாய் உறுதி கொள்வோம் ஆமென்

Do not be anxious about anything, but in every situation, by prayer and petition, with thanksgiving, present your requests to God. And the peace of God, which transcends all understanding, will guard your hearts and your minds in Christ Jesus.

Philippians 4:6-7

ARTICLE BY

# MR. RAJESH

MEN'S FELLOWSHIP

# The Promises ofGod

**2 Corinthians 1:18-22**
The Christian life rests on a foundation of God's promises for today and for the future. We can trust everything that our heavenly Father has said because His Word shows Him to be

**Truthful.** The Lord knows what is true and speaks honestly in all matters. We can be assured of this because He is holy; there is no sin in Him. He is also **omniscient**and understands everything (**Heb. 4:12-13**). His promises are based on His infinite knowledge and truthfulness.

**Faithful.**Scripture compares the Lord to a shepherd who "gathers the lambs in his arms and carries them close to his heart" (**Isa. 40:11**niv). What He has planned for us, He will bring to fruition (**Rom. 8:28**). Our heavenly Father does not waver in His intentions or will.



**Loving.** God's love for us was demonstrated at **the cross**. He sent His Son Jesus to die by crucifixion and thereby take the punishment for our sins. The Savior experienced God's wrath against iniquity so we might know only His love. This is the ultimate proof of His devotion to us.

**All-powerful.** Divine power created the world and raised the Savior back to life, so we know God has the ability to carry out all His plans. Our omnipotent Father can keep every one of His promises.

In embracing the promises of our heavenly Father, we find a foundation built on truth, faithfulness, love, and omnipotence. Anchored in His trustworthy character and unwavering ability to fulfill His word, we can confidently shape our lives. As we step into the new **year of 2024**, may it be a journey guided by the certainty of His promises, bringing joy, hope, and fulfillment. **Happy New Year!**



WOMEN'S Fellowship

Article by

MRS.SUNITHA RAVI



# சாலொமோன்

இஸ்ரயேலின் அரசரா ன தாவீது தனக்கு பத்சேபாள் பெற்ற மகனுக்கு சாலொமோன் என்று பெயரிட்டார். (2சாமுவேல் 12:24) சாலொமோன் என்பதற்கு சமாதானம் என்று பொருள். நாத்தான் தீர்க்கர் வழியாக கர்த்தர் இட்டப்பெயர் யெதிதியா (2சாமுவேல் 12:25) என்பதாகும். தாவீதுக்குப் பின்னர் சாலொமோன் இஸ்ரவேலில் அரசரானார். (1இராஜாக்கள் 1:39).

சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதின் வார்த்தையின் படி கர்த்தரின் கட்டளைகளையும், விண்ணப்பங்களையும் கைக்கொண்ட படியினால் சாலொமோன் ராஜாவாக்கப்பட்டார்.

சாலொமோன் கிபியோனிலே கர்த்தரிடத்தில் என் தேவனாகிய கர்த்தாவே, தேவரீர் உமது அடியேனை என் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத்திலே ராஜாவாகினீரே ; நானோ போக்குவரவு அறியாத சிறுபிள்ளையாய் இருக்கிறேன்.ஆகையால், உமது ஜனங்களை நியாயம் விசாரிக்கவும், நன்மை தீமை என்னவென்று வகையறுக்கவும் அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தாரும் என வேண்டினார்.(1இராஜாக்கள் 3:7—9)

சாலொமோனின் இந்த விண்ணப்பம் கர்த்தரின் பார்வைக்கு உகந்ததாய் இருந்தது.ஆகையினால் தேவன் சாலொமோனின் மனவிருப்பத்தின்படி அவருக்கு ஞானமும் உணர்வும் உள்ள இருதயத்தையும், அவர் சொப்பனத்தில் கேட்டபடி கர்த்தர் அவருக்கு அருளினார். (1இராஜாக்கள் 3:10,12)

ஒரு பிள்ளைக்கு இரண்டு பெண்கள் போட்டியிட்டுக் கொண்டு வந்த வழக்கில் சாலொமோன் அரசர் கொடுத்த தீர்ப்பின் வழியாக கடவுள் சாலொமோனுக்கு அருளின ஞானம் விளங்கிற்று. (1இராஜாக்கள்3:28)

சேபா நாட்டு அரசி சாலொமோனின் ஞானத்தைக் காண விரும்பினார் அதன்படி சாலொமோன் அரசரைத் தேடி வந்து, சாலொமோனின் ஞானம் நிறைந்த ஆட்சி முறைகளைக் கண்டு வியந்துபோனார்.(1இராஜாக்கள் 10:1—9)

திருமறையில் நீதிமொழிகள், பிரசங்கி, உன்னதப்பாட்டு, சங்கீதம்72,127 இவற்றினை படிக்கும்போது ஆண்டவர் சாலொமோனுக்கு அருளின ஞானத்தை நாம் புரிந்து கொள்ள முடியும்.

தன் தகப்பனின் வார்த்தையைப் பின்பற்றி சாலொமோன் ஆலயத்தை எருசலேமில் ஏழு ஆண்டுகளில் கட்டி முடித்தார். (1இராஜாக்கள் 6:38) பின்னர் அவர் அதனோடே கூட புகழ் மிக்க பல கட்டடங்களையும் கட்டினார் (1இராஜாக்கள் 7)

இப்படி ஒன்றிணைந்த யூதா— இஸ்ரயேல் அரசை சாலொமோன் அரசராக ஞானமான முறையில் 40 ஆண்டுகள் அரசாட்சி செய்துள்ளார். (1இராஜாக்கள் 11:42)

நிறைவாக, கவலைப்படாதிருங்கள் காட்டு மலர்களை கவனித்துப் பாருங்கள் சாலொமோன் முதலாய் எவரும் உடுத்தவில்லை (மத்தேயு 6:27—29) என்றார் ஆண்டவர் இயேசு. முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தையும் நீதியையும் தேடுங்கள் அப்பொழுது தேவையானது அனைத்தும் கொடுக்கப்படும் என்று ஆண்டவர் இயேசு கூறுகிறார். (மத்தேயு:6:33)

ஆகவே நாமும் சாலொமோனைப் போல இந்த வாலிப வயதில் நீடித்த நாட்களைக் கேளாமலும்,ஐசுவரியத்தை நாடாமலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பாதச்சுவடுகளைப் பின்பற்றி அவரின் கட்டளைகளையும், கற்பனைகளையும் கைக்கொண்டு அவர் வழி நடப்போம்.அவரைப் பின்பற்றி வாழ்வோம், ஆண்டவர் ஆசீர்வதிப்பார், ஆமென்.

ARTICLE BY

MISS. REVATHI

YOUTH FELLOWSHIP



# HEALTHY EATING FOR HEALTHY CHILDREN

ARTICLE BY
Mrs. Jackulin Milka

Parents are the most important influence on your child. You can do many things to help your children develop healthy eating habits for life. Offering a variety of foods helps children get the nutrients they need from every food group. They will also be more likely to try new foods and to like more foods. When children develop a taste for many types of foods, it's easier to plan family meals. Cook together, eat together, talk together, and make mealtime a family time!

## GO FOOD SHOPPING TOGETHER

Grocery shopping can teach your child about food and nutrition. Discuss where vegetables, fruits, grains, dairy, and protein foods come from. Let your children make healthy choices






## GET CREATIVE IN THE KITCHEN

Cut food into fun and easy shapes with cookie cutters. Name a food your child helps make. Serve "Janie's Salad" or "Jackie's Sweet Potatoes" for dinner. Encourage your child to invent new snacks. Make your own trail mixes from dry whole-grain, low-sugar cereal and dried fruit.

## OFFER THE SAME FOODS FOR EVERYONE

Stop being a "short-order cook" by making different dishes to please children. It's easier to plan family meals when everyone eats the same foods.





## SHOW BY EXAMPLE

Eat vegetables, fruits, and whole grains with meals or as snacks. Let your child see that you like to munch on raw vegetables.

Try new foods yourself. Describe its taste, texture, and smell. Offer one new food at a time. Serve something your child likes along with the new food. Offer new foods at the beginning of a meal, when your child is very hungry. Avoid lecturing or forcing your child to eat



## FOCUS ON EACH OTHER AT THE TABLE

Talk about fun and happy things at mealtime.
Turn off the television.
Take phone calls later.
Try to make eating meals a stress-free time

## MAKE THE MOST OF FAMILY MEALTIME

Eating meals together gives you a chance to help your child develop a healthy attitude toward food. It also enables you to serve as a healthy eating role model, ensure that your kids are eating nutritious foods, introduce your family to new foods, establish a regular meal schedule and keep in touch with family members.





## REWARD WITH ATTENTION, NOT FOOD

Show your love with hugs and kisses. Comfort with hugs and talks. Choose not to offer sweets as rewards. It lets your child think sweets or dessert foods are better than other foods. When meals are not eaten, kids do not need "extras" -such as candy or cookies- as replacement foods.

Limit screen time Allow no more than 2 hours a day of screen time like TV and computer games. Get up and move during commercials to get some physical activity





Encourage physical activity Make physical activity fun for the whole family. Involve your children in the planning. Walk, run, and play with your child -instead of sitting on the sidelines. Set an example by being physically active and using safety gear, like bike helmets

# DECEMBER WINNERS

## Find the way

- AJINSHA
- REEGAN SHAN
- JEMIMA

## Kids Colouring

- JOHANNA JOSE
- SHERINSHA
- JEMIMA

## Word Search

- AJINSHA
- JOSHUA JOSE
- JESSICA

## Cross Word

- JEMIMA
- REEGAN SHAN
- JOSHUA JOSE

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, Email Subject shall be in the following format.

**Email Subject:** Your name / Quiz, type / Month – Year

**To Church Email:** csitcalain@gmail.com

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

# DEUTERONOMY: 13-24

## உபாகமம்: 13–24

JANUARY '24 - QUESTIONS

1. கர்த்தருக்கு விரோதமாகத் துரோகப் பேச்சு பேசியவர்கள் யார்?
2. தானாக செத்ததை யாருக்கு விற்கலாம்?
3. எதை வேலை வாங்கக் கூடாது?
4. கடைப்பிடிக்கச் சொன்ன பண்டிகைகள் எவை?
5. ராஜா எவற்றை தனக்கென அதிகமாகப் பெருக பண்ணக்கூடாது?
6. சபை கூட்டப்பட்ட இடம் எது?
7. எதனை இஸ்ரவேலை விட்டு விலக்கினால் நன்றாய் இருப்பாய்?
8. மனிதரின் ஜீவனத்துக்கானவைகள் எவை?
9. சேஷ்ட புத்திர சுதந்திரம் யாருக்கு கொடுக்க வேண்டும்?
10. எவற்றை பிணைத்து உழக் கூடாது?
11. யார் விளைச்சலில் கதிர்களை அறுக்க கூடாது?
12. யாருடைய வஸ்திரத்தை அடகாக வாங்காதே?

QUIZ TIME ?

### டிசம்பர்- 2023-மாதம் கேள்விக்கான விடைகள் / எழுதியவர்கள்

1. உபா 1:36 | 2. உபா 2:14 | 3. உபா 3:26,27 | 4. உபா 4:29 | 5. உபா 5:22
6. உபா 6:10 | 7. உபா 7:14 | 8. உபா 8:15 | 9. உபா 9:9,18 | 10. உபா 10:13
11. உபா 11:19 12. உபா 12:27

திருமதி.ரேனா ஜோஸ் செல்வகுமார், திருமதி.ராதிகா செல்வகுமார், திருமதி.பிப்ளின் நெல்சன், செல்வி.அஜின்ஷா, திருமதி.ரோஸ்லின் தமிழ்ச்செல்வி

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

Your Name / Bible Quiz / JANUARY'24 / Send to: csitcalain@gmail.com

056 766 8348


Name:

Date:

**Kids Coloring**

# The Lord's Prayer

Our Father, Who art in heaven,
Hallowed be Thy Name.
Thy Kingdom come. Thy Will be done,
on earth as it is in Heaven.
Give us this day our daily bread.
And forgive us our trespasses,
as we forgive those who trespass against us.
And lead us not into temptation,
but deliver us from evil.
Amen.




## Find the Way

Name : ........................................

# Lord's Prayer Maze

Find your way through the maze by connecting each phrase of the Lord's Prayer.
Then color the picture of Jesus at the end of the maze.



# WORD SEARCH

## Teach Us to Pray



And he said unto them, When ye pray, say, Our Father which art in heaven, Hallowed be thy name. Thy kingdom come. Thy will be done, as in heaven, so in earth. Give us day by day our daily bread. And forgive us our sins; for we also forgive every one that is indebted to us. And lead us not into temptation; but deliver us from evil.
Luke 11:2 -4 (KJV)

The puzzle is based on Luke 11:1-4

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Y | L | T | P | H | W | D | V | H | U | H | T | W | A | G |
| F | O | J | E | A | E | H | K | E | O | W | E | M | W | F |
| Y | R | C | O | M | P | A | S | I | N | Z | A | C | Y | S |
| M | D | N | S | E | P | T | V | J | Y | D | C | R | A | R |
| E | T | N | X | Z | G | T | R | E | E | V | H | N | M | J |
| P | I | Q | D | M | R | K | A | W | N | D | O | O | W | V |
| S | H | X | I | A | A | F | O | T | Z | C | D | F | E | H |
| F | U | M | H | W | I | L | O | C | I | G | T | E | A | H |
| Q | A | U | B | U | L | L | B | R | N | O | V | E | R | A |
| V | P | T | C | A | X | H | Y | I | G | E | N | Z | T | V |
| P | N | A | H | D | Z | K | K | Y | B | I | V | P | H | N |
| V | R | A | Q | E | G | U | R | K | I | U | V | I | G | H |
| C | Q | A | M | R | R | H | P | W | B | H | F | E | L | G |
| O | I | B | Y | E | F | K | U | W | H | O | F | E | Z | G |
| D | J | O | C | F | B | R | E | A | D | Q | N | C | Q | M |


| | | | | |
|---|---|---|---|---|
| TEACH | FATHER | HEAVEN | EVIL | DAILY |
| FORGIVE | KINGDOM | HALLOWED | NAME | BREAD |
| EARTH | SINS | PRAY | TEMPTATION | LORD |

Name : ........................................

# CROSS WORDS

**Name :** ........................................................................

## THE LORD'S PRAYER








**Across**

1. For Thine is the kingdom, and the glory and the _______________ forever. Amen
6. Thy _____________ be done.
7. As we forgive our _____________
9. Thy _______________ come.
10. And forgive us our __________
11. Give us this __________
12. Our Father which art in ______________

**Down**

2. ________________ be thy name.
3. Our daily ____________
4. On ____________ as it is in Heaven.
5. ______________ us from evil
8. Lead us not into _______________

# JANUARY - 2024

| | |
|---|---|
| 02-JAN | Ms. Joshika Vashni D/o Mr. Kingsly Stoobert |
| 02-JAN | Mr. A. Prem Jenifer |
| 03-JAN | Baby. Johannah D/o Mr. Suresh Babu. |
| 04-JAN | Mrs. Helena Santhosh |
| 07-JAN | Master. Devon Crastillon S/o Mr. Rajesh ChellaDurai |
| 08-JAN | Master. Roshan S/o Mr. Ravindra |
| 09-JAN | Ms. Ansilin Suga |
| 12-JAN | Master. Geovin S/o Mr. George Rose |
| 13-JAN | Master.. John Jebaneson S/o Mr. Lenin |
| 16-JAN | Master. Abinesh Solomon S/o Mr. Aruldhas |
| 17-JAN | Mr. Antony Jesu Rajan |
| 18-JAN | Mr. John Joseph |
| 19-JAN | Master. Kevin S/o Mr. Joel Ranjith Kumar |
| 19-JAN | Master. D.L. Derrik S/o Mr. David Livingston |
| 20-JAN | Mr. Abishek Solomon S/o Mr. Aruldhas |
| 20-JAN | Baby. Shiphrah Shalom D/o Mr. Santhosh Kumar. M |
| 22-JAN | Mrs. Philomina |

*Wish you many more happy returns of the day God bless you all*

# JANUARY - 2024

| | |
|---|---|
| 22-JAN | Mrs. E.Nancy Angelo |
| 23-JAN | Baby. V. Zia Miren D/o Mr. Vijinraj. P |
| 24-JAN | Mr. Ashok Prasad |
| 25-JAN | Mrs. Ramya Mergaratee |
| 26-JAN | Mr. Divya Venkatesan |
| 27-JAN | Master. Jonathan Asher S/o Mr. Suresh Rajan. |
| 28-JAN | Mr. M. Santhosh Kumar |
| 28-JAN | Mrs. Sathvikalakshmi |
| 29-JAN | Baby. J.V. Achsah Bernice D/o Mr. Jeyakumar |

## JANUARY *Wedding* ANNIVERSARY

**05-JAN**
Mr. Jayan Dharmaraj
&
Mrs. Helen Hemabai

**11-JAN**
Mr. Belfer John Sigamony
&
Mrs. Jeyantha

**07-JAN**
Mr. R. Paul Gnana Prabu
&
Mrs. Nirmala Jenifer Paul

**21-JAN**
Mr. C. Havin Heba
&
Mrs. R. Jackulin Milka

**29-JAN**
Mr. Rajan Prabakaran
&
Mrs. J. Ajeetha






Christmas
SERVICE







Christmas
SING SONG
















# Christmas TREE & GIFTS










2024
HAPPY NEW YEAR
EDITOR
THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE
TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348
Email: csitcalain@gmail.com
Web: csitamilparishalain.org
STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY